**செய்தி வெளியீடு எண் : 452** **நாள்: 23.03.2022**

## செய்தி வெளியீடு

## கவிச்சக்கரவர்த்தி கம்பர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர்த் தூவிப் போற்றுதல் நிகழ்ச்சி

தம் கவிபாடும் திறத்தால் புவி மக்கள் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்ட கவிஞர் கம்பர்!

'கல்வியில் பெரியவர்' என்றும் 'கவிச் சக்கரவர்த்தி என்றும்' போற்றப்படும் கம்பர், தமிழில் மட்டுமின்றி வடமொழியாம் சமசுகிருதத்திலும் ஆழ்ந்தப் புலமை பெற்றவர். மகாகவி பாரதியால் "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவனைப் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" எனப் பெரிதும் புகழப்பெறுமிவர், 'கம்பராமாயணம்' படைத்து வானளாவிய பெருமை பெற்றவர்!

'சடகோபர் அந்தாதி', 'சரசுவதி அந்தாதி', 'திருக்கை வழக்கம்', 'ஏரெழுபது', 'மும்மணிக்கோவை' ஆகிய நூல்களையும் படைத்தளித்த இக்கவிஞர் பெருமானை நினைவு கூறுகின்ற வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் மார்ச்சு திங்கள் 24 ஆம் நாளன்று சென்னை அண்ணா சதுக்கத்திலுள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்ககளாலும், தமிழறிஞர்களாலும் மாலை அணிவித்தும் மலர்கள் தூவியும் சிறப்புச் செய்து மரியாதை செய்யப்படுகிறது.

அவ்வகையில் சென்னை அண்ணா சதுக்கத்தில் அமைந்துள்ள கவிச்சக்கரவர்த்தி கம்பர் அவர்களின் சிலைக்கு 24.03.2022 அன்று காலை 10.00 மணிக்கு மாலை அணிவித்து சிறப்பிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், தமிழறிஞர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in